வண்ணப்
புகைப்படங்களுக்கும்
வீடியோ
படப்பிடிப்புக்கும்
என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ
அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

வண்ணப்
புகைப்படங்களுக்கும்
வீடியோ
படப்பிடிப்புக்கும்
என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ
அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 19 திங்கட்கிழமை (02 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 155

அணிவகுப்புகள், ஊர்திப் பவனி சகிதம்

விடுதலை உணர்வும் எழுச்சியும் பொங்க நிகழ்ந்த பிரமாண்டமான மேதின விழா

அலையாய் திரண்டனர் மக்கள்

யாழ்ப்பாணம், மே 2

உலகத் தொழிலாளர் தினமான மே நாள் விழா, யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று தேசிய எழுச்சி பொங்கவும், மிகுந்த சுதந்திர உணர்வுடனும் மிகவும் பிரமாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது.

குடாநாட்டின் சகல கோட்டங்கள், வட்டங்களையும் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட பேரணி விழாவுக்கு மெருகும், முறுக்கும் ஏற்றியது. பேரணியில் இடம்பெற்ற அலங்கார ஊர்திகளும், கலாசார நிகழ்வுகளும் விழாவுக்கு மேலும் சிறப்பூட்டின; அணிவகுப்புகள் பேரணிக்கு எழிலூட்டின.

பேரணி தமிழீழ மக்களின் சுதந்திரத்துக்கான தணியாத தாகத்தையும், அதற்காகப் போராடுவதற்கான மன உறுதியையும், அரச விதிக்கக்கூடிய அரசியல், பொருளாதார அழுத்தங்கள், நெருக்குதல்கள் ஆகியவற்றை எதிர்கொண்டு வாழ்ந்து வளர்வதற்கான மனோ பலத்தையும் வெளிக்கொணரும் விதத்தில் அமைந்தது.

பேரணியில் இடம்பெற்ற அலங்கார ஊர்திகள் தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையை மட்டுமன்றி, அதற்கான வீரத்தையும் மனப்பலத்தையும் மட்டுமன்றி அரசின், அரச படைகளின் நடுக்குமுறைகளையும், அட்டூழியங்களையும் தத்ரூபமாகச் சித்திரித்தன.

மே தின கொண்டாட்டம் நேற்றுக் காலையில் இருந்தே கோட்டங்களில் களைகட்டத் தொடங்கியது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கோட்டங்களிலும் வட்டங்களிலும் பிரதான பேரணியில் கலந்து கொள்ள வருவதற்காக பஸ் நிலையங்களிலும், இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலும் மக்கள் திரண்டதாக எமது பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்தார்கள்.

அவ்வப்பகுதி மக்கள், ஊர்திகள் சகிதம் முற்பகல் 12 மணி அளவில் மருதனார்மடம்

[4ஆம் பக்கம் பார்க்க]

அறிவித்தபடி கூரே நேற்று இராஜினாமா!

கொழும்பு, மே 1

எதிர்பார்க்கப்பட்டபடி -- ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் பதவியை சிறிசேன கூரே நேற்று இராஜினாமாச் செய்தார் என அறிவிக்கப்பட்டது.

எனினும் வீடமைப்பு நிர்மாணத்துறை, நகர அபிவிருத்தி அமைச்சராக அவர் தொடர்ந்து இருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

(உ-3)

சிங்கள ராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்படும் வரை போராடுவோம்

மேதினக் கூட்டத்தில் பாலகுமாரன் சூளுரை

யாழ்ப்பாணம், மே. 2

'உண்மையான ஒடுக்குமுறையின் கருவி இராணுவம் தான். அதன் முதுகெலும்பு முறிக்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும்'

—இவ்வாறு சூளுரைத்தார் தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமாரன்.

நேற்று யாழ்ப்பாணத்தில் மே தினக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.சி. இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பாலகுமாரன் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் சிங்கள அரசியல் கட்சிகள் எல்லாம் கலவரமடைகின்றன; எதிர்க் கட்சிகளின் கை ஓங்குகின்றது; ஆட்சியிலே குழப்பங்கள் தெரிகின்றன. ஆகவே தமிழ் மக்களுக்கு நல்ல காலம் வரும் என்ற ஒரு மயக்கநிலை இங்கே தோற்றுவிக்கப்படுகிறது.

எமது போராட்டத்தின் விளைவாக சிங்களக் கட்சிகள் பலவீனமடைவது உண்மை. ஆட்டம் காண்பது உண்மை. ஆனால் எம்மீதான ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் அரசாங்க கட்சிகளுடன் மட்டும் நிற்பது அல்ல. அடக்குமுறை இயந்திரமாக சிங்கள ஆதிபத்தியத்தின் வெளிப்பாடாக இராணுவமே இருக்கின்றது.

அந்த இராணுவமானது இந்த சந்தர்ப்பத்திலும் — இவ்வளவு மோசமான குழப்ப நிலையிலும் — தன்னைப் பலப்படுத்த இராணுவ தளபாடங்களை இரவோடு இரவாகச் சேர்த்துவருகிறது.

சிங்கள மக்களுக்குச் சேர வேண்டிய பணத்தை சுருட்டி அதை ஏப்பம் விட்டு தனது பலத்தைப் பெருக்கி வருகிறது.

உண்மையான ஒடுக்குமுறையின் கருவி இராணுவம் தான். அதன் முதுகு எலும்பு முறிக்கப்படும்வரை எமது போராட்டம் தொடரவே செய்யும்.

உணரும் காலம் வரும்

எமது போராட்டம் முன்னெடுக்கப்படும் போது சிங்கள தேசத்து தொழிலாளர்கள், மலையகத் தமிழ் பேசும் மக்கள், கொழும்பிலே வாழ்கின்ற முஸ்லிம் மக்கள், முஸ்லிம் தொழிலாளர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து

பொது தீர்வை முன்வைப்பது பற்றி தொண்டா-அஷ்ரப் கூடிப் பேச்சு

தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து இனப்பிரச்சினைக்கு பொதுவான அரசியல் தீர்வு யோசனை ஒன்றை முன்வைப்பது தொடர்பான முன்னோடி நடவடிக்கைகளில் —

இ.தொ.கா. தலைவர் தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் ஈடுபட்டிருப்பதாக கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இவர்கள் இருவரும் ஏற்கனவே இது குறித்து சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கம், ஏனைய தமிழ்க் கட்சிகள் மற்றும் முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை அமைச்சர் தொண்டமான் பெற்றிருப்பதால் பொது உடன்பாடு காணும் விடயத்தில் அவர் உதவ முடியும் என்று அஷ்ரப் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து இருவரும் மீண்டும் எதிர் வரும் 11 ஆம் திகதி சந்தித்துப் பேசவிருக்கிறார்கள். (உ-9)

எதிரணியின் மேதினப் பேரணியில் நேற்று மக்கள் கூட்டம் திரண்டது!

கொழும்பு, மே 1

கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் நேற்று மேதினத்தை ஒட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தலைநகரில் பதற்றம் நிலவியது. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது.

எனினும் எதிரணியினரின் மேதினப் பேரணியில் மக்கள் கூட்டம் திரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆளும் ஐ.தே.க. இம்முறை மேதினப் பேரணியையோ கூட்டத்தையோ நடத்தவில்லை என்பது தெரிந்ததே.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேரணி இருளப்பனை மாநகரசபை மைதானத்தில் இருந்து ஆரம்பித்து பொரளை கம்பெல் பூங்காவை வந்தடைந்தது.

ஸ்ரீ.ல.சு.க, ல.ச.ச.க., கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை மக்கள் கட்சி, (வை.பி.டி. சில்வா பிரிவு), தேச விமுக்தி பெரமுன, [ம.ஐ.மு. ஆகியவை கூட்டாக இந்தப்பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் நடத்தின.

ஏனைய கட்சிகளின் பேரணிகள், கூட்டங்களும் கொழும்பில் நடந்தன.

(உ-3-6-9)

அரசைக் கவிழ்க்கச் சதியா? வீண் புரளி என்கிறார் கூரே!

லக்கி அல்கமவுக்கும் சதிச் செய்தி ஆச்சரியமாம்

கொழும்பு, மே 2

"அரசைக் கவிழ்ப்பதற்கு நாம் சதி செய்கின்றோமா? வீண் புரளி அது."

—இப்படிக் கூறினார் அமைச்சர் சிறிசேன கூரே.

அமைச்சர் கூரே, பிரதம இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுடன் சேர்ந்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி செய்வதாக சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

"நாம் சதி செய்யும் பேர்வழிகள் இல்லை. சதி முயற்சி ஒன்று இடம்பெறுவதாக புலனாய்வு அறிக்கையைச் சமர்ப்பித்த இரகசிய பொலீஸ் அதிகாரியிடம் தான் இது குறித்து கேட்கவேண்டும்." —என்றார் அவர்.

"சதி தொடர்பாக வெளியான செய்தியில் எந்தவித உண்மையுமில்லை. இச்செய்தி எனக்கு பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரை நான் தொழில்சார் இராணுவ உத்தியோகத்தன். நாட்டையும் அரசையும் பாதுகாப்பதே எனது கடமையாகும் நான்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்து நிறுத்தம்

புதுடில்லி, மே 2

தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன என்று இந்திய வானொலி நேற்று நண்பகல் அறிவித்தது.

படுகொலையுண்ட பிரேமதாஸாவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் —

அதன் ஒரு நடவடிக்கையாகவே தாண்டிக்குளம் போக்குவரத்து நிறுத்தப்பட்டதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது. (உ-த)

மன்னாரில் கடலுக்கு சென்ற 3 மீனவரைக் காணவில்லை

கொழும், மே 2

மன்னாரில் கடந்த திங்களன்று கடற்றொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

அவர்கள் தொழிலுக்குச் சென்ற வள்ளம் கரை ஒதுங்கியிருப்பதாகவும் — அதில் இரத்தக் கறைகளுடன் வெற்றுத் தோட்டாக்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜூட், றொபர்ட், அம்ரோஸ் ஆகியோரே காணாமற் போயிருப்பதாகக் கூறப்பட்டது.

முச்சந்தி முரலி



போன வருஷ மேதினத்தை யோசிச்சிருப்பார்... வயிற்றைக் கலக்கியிருக்கும்

பிரேமா சிலை திறப்புக்கு ஜனாதிபதி பாதுகாப்புக்கு அஞ்சி வரவில்லை!

அவருக்கு உடல்நலமில்லை என்று அறிவிப்பு

கொழும்பு, மே 2

நேற்றுக் காலை கொழும்பு செட். செபஸ்தியார் வீதியில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் வெண்கலச் சிலையைத் திறந்து வைக்கும் வைபவம் நடைபெற்றது.

ஆனால் அரச தரப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பங்குபற்றவில்லை.

உடல் நலமில்லாததால் இந்நிகழ்ச்சியில் அவர் பங்குபற்றவில்லை என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அவர் பங்குபற்றவில்லை எனத் தெரிவதாக பல செய்தி நிறுவனங்கள் குறிப்பிட்டன.

நேற்றைய மே தினம் போல் — கடந்த வருடம் நடைபெற்ற மே தினத்தின் போது — பேரணியில் வைத்து பிரேமதாஸா வெடிகுண்டு தாங்கிச் சென்ற ஒருவரால் படுகொலை செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி நிகழ்ச்சியில் பங்குபற்றாததால் அவர் விடுத்த செய்தியை, அவரின் செயலாளர் கே.எச்.ஏ விஜேதாஸா அங்கு வாசித்தார்.

விஜேதுங்க நேற்றைய நிகழ்ச்சியில் பங்குபற்றாத போதிலும், நேற்று முன்தினம் சிலை திறப்பு விழா நடைபெறும் பகுதிக்குச் சென்று விழா ஏற்பாடுகளைப் பார்வையிட்டார். அவர் அதனைப் பார்வையிடுவதை ரூபவாஹினி

(3 ஆம் பக்கம் பார்க்க)

பிரேமா குடும்பமும் பகிஷ்கரித்தது!

கொழும்பு, மே 2

நேற்றுக் காலை நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிலை திறப்பு வைபவத்தை பிரேமதாஸாவின் குடும்பத்தவர்களும் பகிஷ்கரித்தனர்.

சிலை திறப்பு விழா நடைபெற்ற சமயம் —

அந்த இடத்துக்கு சுமார் 200 யார் தூரத்தில், அமைந்துள்ள சுசரித மண்டபத்தில், பிரேமதாஸாவுக்கு ஆத்மசாந்தி வேண்டி, அவரின் குடும்பத்தவர்கள் ஏற்பாடு செய்திருந்த சமயச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

எனினும் குடும்பத்தவர் எவரும் சிலை திறப்பு விழாவில் பங்குபற்றவில்லை.

ஆனால் திறப்பு விழா நடைபெற்ற பின்னர் -- நேற்று மாலையில் -- திருமதி ஹேமா பிரேமதாஸா, தமது மகன், மகள், மருமகன் சகிதம் சென்று சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

தமது தந்தைக்கு அமைக்கப்பட்ட சிலை சரியாகவே அமையவில்லை என்றும் —

சிலை அமைப்பது குறித்து ஐ.தே.க. தங்களுடன் கலந்[illegible] என்றும் —

பிரேமதாஸாவின் மகன் சஜித் குற்றம் சுமத்தினார்.

(உ-8)

டி. பீக்கு தலைநகரிலேயே பாதுகாப்பு உறுதி இல்லை

கொழும்பு, மே 2

பாதுகாப்பு காரணங்களுக்காக பிரேமா சிலை திறப்பு விழாவுக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வரமுடியவில்லை என்பது —

நாட்டின் தலைவருக்கு தலைநகரில் கூட பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையிலேயே படையினர் உள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

— செய்தி ஏஜென்ஸி ஒன்று இவ்வாறு விமர்சனம் தெரிவித்தது.

இரு வாரங்களுக்கு முன்னர் உல்லாசப் பயணிகள் தங்கும் ஹோட்டல்களில் வெடித்த குண்டுகள் மூலமும் —

தமிழ்ப் புலிப்படையினர் இன்னமும் தாங்கள் வடக்கில் தமது தளங்களில் இருந்து கொண்டே தலைநகரில் மிகச்சுலபமாக தாக்குதல் நடத்த முடியும் என்பதைக் காட்டியுள்ளனர் என பி.பி.ஸி. அறிவித்தது. (உ-8)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

கடைகளுக்குப் பாவிக்கக் கூடிய சுருக்கு கேட் 14 அடி x 8 அடி விற்பனைக்குண்டு. C. கணேசன், 286, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (306 7)

நல்ல இன பன்றம் கோழிகளும், இரண்டு மாதம் நிரம்பிய பன்றம் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு க. க. நல்லையா, பிரம்படி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (7360)

பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு இல. 265, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பார்வையிட வேண்டிய நேரம் பிற்பகல் 2-30 மணிக்குப் பின்னர். (30693)

வீடு விற்பனைக்கு

மட்டுவில் திருக்கணித நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீவிஷ்ணு முகவர், பிரதான வீதி, சாவகச்சேரி. (30627)

தவறிவிட்டது

19-04-94இல் மீசாலையில் இருந்து யாழ். வைத்தியசாலைக்குத் துவிச்சக்கர வண்டியில் சென்று திரும்பும் வழியில் தங்கச்சங்கிலி தவறிவிட்டது. யாரும் கண்டெடுத்திருந்தால் தயவுசெய்து ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: V. P. தியாகராஜா 'லக்ஷ்மி', சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. (30671)

முல்லைத்தீவிலும் இரட்டை சூட்டடுப்பு அறிமுகம்

யாழ்ப்பாணம், மே 2

முல்லைத்தீவு மாவட்டத்திலும் இரட்டைச்சூட்டடுப்பு கட்டும் பணியை அம்மாவட்டத்தில் உள்ள கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் இணைந்து தமிழ்ப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் தீவிரப்படுத்தியுள்ளனர். (த-எ)

சிறுதானிய பயிர்ச்செய்கை பாதிப்பு!

தாளையடி மே 2

வடமராட்சி கிழக்கில் சிறுதானியப் பயிர்ச் செய்கை, நோயினாலும் போதிய மழை இன்மையாலும் பாதிப்படைந்துள்ளது.

குடத்தனை, அம்பன் செம்பியன்பற்று ஆகிய இடங்களில் பயிரிடப்பட்டுள்ள கௌபி, பயறு ஆகிய பயிர்களே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகி உள்ளன. (-144)

அதிரடிப் படை முகாம்!

கொழும்பு, மே 2

மட்டக்களப்பு மாவட்டம் மகிழடித்தீவு அரச மருத்துவமனையில் அதிரடிப் பொலிஸ் படையினர் தமது முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

திரு
நியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

O/L DAY CLASS
நடைபெறுகின்றது

விஞ்ஞானம் — இரா. செல்வகுகேசன்
கணிதம் — திரு. மகேந்திரன்
தமிழ்
சமயம்] — திரு. பண்டிதர்
சமூகக்கல்வி — திரு. வேணா
ஆங்கிலம் — திரு. தர்மலிங்கம்
வர்த்தகம் — திரு நவம்
சித்திரம் திரு ரமேஸ்

[சி-8053]

யாழ். மாவட்ட ரீதியில்
ராஜன் சைக்கிள் வேர்க்ஸ்
ஆதரவில்
பருத்தித்துறை
ஐக்கிய விளையாட்டுக் கழகம்
நடத்தும்
இ. உதயணன்
கிண்ணத்திற்கான
1994ஆம் ஆண்டு கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் (செற்அப்)
அரை இறுதி, இறுதி ஆட்டங்கள்
மின் ஒளியில் நடைபெறும்

இடம்: திக்கபுனை மைதானம்
(பருத்தித்துறை)
காலம்: 02 — 05 — 1994
மாலை 7-00

அரை இறுதி ஆட்டங்கள்
பாரதி வி. கழகம் (யாழ்ப்பாணம்)
எதிர்
K K S ஐக்கிய வி. கழகம்
மாலை 8-00
ஆவரங்கால் மத்தி A. வி. க.
எதிர்
மோகனதாஸ் வி. க (மட்டுவில்)

3 ஆம் இடத்திற்கான போட்டியும்
இறுதிப் போட்டியும்
03 – 05 – 1994 மாலை
7மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்

அன்றைய தினம் ஐ. வி. கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டம், கபடி, சரப்பந்தாட்டம் போன்றவற்றிற்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

நன்றி;
நிர்வாகம்,
பரு. ஐ. வி. கழகம்.

பொ. இராசதுரை,
இராஜன் சைக்கிள் வேர்க்ஸ்,
பருத்தித்துறை.

[சி-7984]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 01 — 1917

மறைவு: 13 — 05 — 1993

அமரர் தம்பு கந்தையா
திதி: 02 – 05 - 1994

ஆண்டு ஒன்று சென்றது. ஆனாலும் உங்கள் நினைவலைகள் எங்கள் உள்ளங்களை விட்டு நீங்கா.

- குடும்பத்தினர்

கொக்குவில். (30692)

6ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 09 - 11 - 1920

ஆண்டவன் அடியில்: 09 - 05 - 1988

அமரர்
நாகலிங்கம் பாலகிருஸ்ணர்
(பத்தர்)
திதி: 02 - 05 - 1994

"தம்பொருள் என்ப தம் மக்கள் அவர்பொருள் தம்தம் வினையான் வரும்"

ஐயா! உங்கள் எண்ணங்களை செயலாக்கி நீங்கள் காட்டிய பாதையில் செல்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்

மணியகாரன் வீதி,
தெல்லிப்பழை
(பன்னாலை, மல்லாகம்)

பாடசாலை அனுமதி

நவீல்ட் செவிப்புலன்
விழிப்புலனிழந்தோர் பாடசாலை
கைதடி

பாடசாலையில் சேரும் வயதெல்லைக்குட்பட்ட செவிப்புலன் / விழிப்புலனிழந்த ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர். கல்வி, தங்குமிடம், உணவு யாவும் இலவசம் (நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப்படும்) விண்ணப்பிக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

— அதிபர்.

[சி-7963]

RADIO & ELECTRONIC TECHNICIAN COURSE

புதிய வகுப்புக்கள்

ஆரம்பம்:
வார நாள்: 09-05-1994
வார இறுதி நாள்: 08-05-1994

- சிறந்த இரு விரிவுரைகள்
- கூடிய செய்முறைப் பயிற்சிகள்
- தவணைக் கட்டணங்கள்

விபரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, ST PETER'S LANE, JAFFNA.

[சி-7946]

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A\L 96 கலை, வர்த்தக வகுப்புகள்
அடுத்த புதிய பிரிவு

WEEKEND CLASSES
EVENING CLASSES
07 05 1994 சனிக்கிழமை
காலை 8-00 மணி

திறமைமிக்க எமது பட்டதாரி ஆசிரியர் குழு:

பொருளியல் — திரு க. கலாகரன்
வர்த்தகம் — திரு தேவா
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
அளவையியல் — திரு விக்கி
இந்து நாகரிகம்
இந்து சமயம்] — திரு காரை சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு குழந்தை
வரலாறு — தி சிறிதரன்
அரசியல் — திரு சிவா
கிறிஸ்தவம் — திரு தனேஸ்வரன்

★ கலை வர்த்தகத் துறையின் முன்னோடி நிறுவனம்
★ அனுபவமும் ஆளுமையும் மிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் சிறந்த பெறுபேறுகளை வழங்கி வரும் நிறுவனமும் இதுவே.

(சி-8060)

முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 22 12 1944

மறைவு: 02 05 1993

வைத்திய கலாநிதி
இரத்தினசபாபதி பாக்கியநாதன்
(சமாதான நீதிவான்)

"நீங்கள் காட்டிய பாதையில்
உங்கள் சேவைகளை நோக்கி
உங்கள் நினைவுகளைச் சுமந்து நடக்கிறோம்.
உங்கள் அன்பு
எங்கள் எதிர்காலத்தை
எப்போதும் ஆசீர்வதிக்கும்!!

குடும்பத்தினரும், நண்பர்களும்

பொன்னையா வைத்தியசாலை,
திருநெல்வேலி கிழக்கு.

(சி-7982)

எடிசன் அக்கடமி

(யாழ் இந்து அருகில்)
411/1, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

எமது இரு நிறுவனங்களிலும்
O/L DAY CLASSES
முற்றிலும் புதிய பிரிவு
ஆரம்பம்: 03 – 05 – 1994
செவ்வாய்க்கிழமை 8-00 மணி

★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ கணிதம் வாரத்தில் 6 மணி நேரம் நடைபெறும்.

(சி-7985)

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஓர் நிறுவனம்)

O/L DAY CLASSES
(8-30 – 2-00)
புதிய 4ஆம் பிரிவு
ஆரம்பம்:
05 - 05 1994
காலை 8-30 மணி

SAT. SUN CLASSES
(8-00 – 2-00)
புதிய 2ஆம் பிரிவு
ஆரம்பம்: 07 - 05 - 1994
காலை 8-00 மணி

EVENING CLASSES
(3-15 – 6-10)
புதிய 3ஆம் பிரிவு
ஆரம்பம்: 05 - 05 - 1994
மாலை 3-15 மணி

★ நிலையான பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.
★ அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-8065)

தென்னிந்திய திருச்சபை
யாழ். பேராயம்

நம்பிக்கை இல்லம்
(HOUSE OF HOPE)

மேற்படி இல்லத்திற்கு உடல் வளமுற்ற வலது குறைந்த [Physically Disabled] ஐந்து (5) வயதிற்கும், பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் முழு விவரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயற்திட்ட பணிப்பாளர்
தென்னிந்திய திருச்சபை.

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி 7944)

ஈராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்: 05 — 03 — 1938

ஆண்டவன் அடியில்: 24 — 04 — 1992

அமரர் செல்லத்துரை தேவராசா
[இளைப்பாறிய தபாலதிபர்]
திதி: 02 05 1994

அன்பின் இருப்பிடமே! அருள் நிலையின் அணையாத தீபமே! நீங்கள் பாசமுடன் அணைத்து மகிழ்ந்த [illegible] நெஞ்சு நிறை நினைவுகள் [illegible] ஈராண்டு நினைவு நாளில் [illegible] ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, அருமை மகன்,
குடும்பத்தினர்:

"அருள் நிலை"
வேலணை மேற்கு,
வேலணை.

(30657)

உதயன்
[illegible] நவம்பர் [illegible]
[illegible]

மேதின - தேர்தல் வாக்குறுதிகள்!

பதினேழு வருடங்களாகத் தொடர்ந்து ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி உழைக்கும் தொழிலாளர் தினமான — மே நாளான — நேற்று முழுமையான நிகழ்வு எதனையும் நடத்தவில்லை.

அதனை ஈடுசெய்யும் விதத்தில் பிரேமதாசா — மேதினச் செய்தி ஒன்றைத் தயாரித்து ஜனாதிபதி விஜேதுங்கா, வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வாசித்தார். அந்தச் செய்தி அனேகமாக ஒரு வரவு - செலவுத் திட்ட உரை போலவே அமைந்தது.

இன்னும் விளக்கமாகக் கூறுவதானால். தேர்தலை மனதில் வைத்துத் தயாரிக்கப்பட்ட குட்டி ''பட்ஜெட்'' டாகவும், இன்னொருவகையில் தேர்தல் விஞ்ஞாபனமாகவும் அமைந்திருந்தது.

அரசாங்க, தனியார் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களினதும் விவசாயிகள், மீனவர்கள், கைவினைஞர்கள் உட்பட்ட சுயதொழில் செய்வோரினதும், மாணவர்கள், இளைஞர்களினதும் நலன்களில் மிகப்பெரும் அக்கறை கொண்டவர் போல ஜனாதிபதி தமது மேதின - பிரேமதாசா நினைவுதின குட்டி ''பட்ஜெட்'' உரையை அமைத்திருந்தார்

விஜேதுங்கா தாம் பதவிக்கு வந்த ஒரு வருட காலத்தில், பிரேமதாசா நடைமுறைப்படுத்திய பல கொள்கைகளையும் திட்டங்களையும் பின்தள்ளி கைவிட்டிருந்தார். சில திட்டங்களை இல்லாது ஒழிக்கவும் முயன்றார். ஆனால் நினைவுப்பேச்சிலே பிரேமாவின் திட்டங்களில் பற்று உள்ளவர் போலவும், அபிமானம் கொண்டவர் போலவும் அவற்றைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருபவர் போலவும் காட்டிக் கொண்டார்!

அது போலவே தாம் மக்கள் நலனில் அக்கறை உள்ள தலைவர் போலவும், மக்கள் கஷ்டங்களைப் புரிந்து கொண்டவர் போலவும் அவர் பேசினார்.

வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருகிறது அதனால் மக்களில் பலர் தமது சீவியத்தைக் கொண்டு செல்ல முடியாது கஷ்டப்படுகிறார்கள் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று பரிந்து பேசினார்!

பட்டதாரிகள் உட்படப் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள், நங்கையர்கள் வேலையற்று இருக்கிறார்கள். இவர்களின் கல்வி, தொழில் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்றார்!

ஜனாதிபதியாக மட்டுமன்றி, கடந்த ஆறு வருடங்களாக நிதி அமைச்சராகவும் பணிபுரிந்து வரும் இவருக்கு வாழ்க்கைச் செலவு உயர்வால் மக்கள் கஷ்டப்படுவதும், லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலையற்றிருப்பதும் இப்போதுதானா கண்ணுக்குத் தெரிகிறது அவர்கள் நலனில் இதுவரை உரிய அக்கறை காட்டாதவர் இனித்தானா உதவப் போகிறார்?

தோல்வி தோளுக்கு மேல் வந்துவிட்டது என்ற நிலையில் ஞானம் பிறந்த நிலையில், அவர் போடும் மந்திரத்தில் சிங்கள மக்கள் மயங்குவார்கள் என்று நினைப்பதற்கில்லை.

விஜேதுங்கா சனிக்கிழமைச் செய்தியில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற மற்றொரு வரவு-செலவுத் திட்டத்துக்குத் தேவையான நிதி தேவை அவரிடம் அத்தனை கோடி ரூபா பணம் கையிருப்பாக இருக்குமா? பணப் பெட்டியில் இருந்து எடுக்க முடியுமா?

வடக்கு-கிழக்குப் போருக்கு கோடானு கோடி ரூபாவை செலவிடுபவரிடம், மேலும் செலவிடத் துணிந்தவரிடம், அவர் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற எங்கு பணம்?

யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, அதற்கு ஒதுக்கிய பணத்தைக் கொண்டு சம்பள உயர்வும், தொழில் வாய்ப்புக்கள் மற்றும் நலத் திட்டங்களையும் உடனடியாக நடைமுறைப்படுத்தினாரானால் இங்கு மக்களின் வாக்குகள் அவருக்குக் கிடைக்கலாம். அவ்வாறு செய்வாரா விஜேதுங்கா? தேர்தலில் வெல்ல வேண்டுமா, யுத்தத்தை தொடர வேண்டுமா என்பதை அவரே தீர்மானிக்கட்டும்!

அகதிகளைக் கட்டாயப்படுத்தி பிரான்ஸ் மீள அனுப்பவில்லை

அந்நாட்டு தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு மே 2

பிரான்ஸிலிருந்து இலங்கை அகதிகள் எவரையும் இதுவரை வலுக்கட்டாயமாக நாம் திருப்பி அனுப்பவில்லை. விருப்பத்தின் பேரில் ஒரு சிலர் மாதாந்தம் தாயகம் திரும்புகின்றனர்.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதர் ஜே. எஸ் வன்டோர்வ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவர் திருமலைக்கு விஜயம் செய்தார்.

அங்கு அவரை வரவேற்ற யாழ். மாவட்ட எம். பி. திரு. ஸ்ரீகாந்தா, திருமலை நகரசபைத் தலைவர் திரு. பெ. சூரியமூர்த்தி ஆகியோர் இலங்கையின் நிலைமை சுமுகமாகும் வரை அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதிலளித்த பிரான்ஸ் தூதர்—

பலாத்காரமாக எவரும் திருப்பி அனுப்பப்படவில்லை. பிரான்ஸில் இதுவரை 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கையர் சட்டவிரோத முறையில் தங்கியுள்ளனர்.

கொழும்பில் எனக்குத் தெரிந்த ஒருவர் நல்ல தொழிலில் இருந்தார் அவரை சிறிதுகாலம் காணவில்லை அவர் பிரான்ஸில் சட்டவிரோதமாக இருப்பதாகப் பின்னர் தெரியவந்தது — என்றார் (த 5)

பாலர் பாடசாலை

தாளையடி, மே 2

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுத்துறை வடக்கில் பாலர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது

இக் கிராமத்தில் பாலர் பாடசாலை இல்லாத குறை இதனால் நீங்கியது.

(த-144)

அரசு சதித்திட்டம்

கொழும்பு, மே 2

இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்தி உள்நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தும் சதித் திட்டம் ஒன்று அரசதரப்பில் உள்ளது என குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சி எம். பி [illegible] ரத்தினா தென்னக்கோன் இவ்வாறு கூறியிருக்கிறார்

(த-எ)

மானிப்பாய் பகுதியில் சிசு மரண வீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 2

வடபிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே சிசு மரண வீதம் அதிகமாகக் காணப்படுகிறது.

இங்கு நடந்து முடிந்த காலாண்டு காலப்பகுதியில் மட்டும் 24 சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இது 4·61 வீதமாகும் என அண்மையில் நடைபெற்ற வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் காலாண்டு கால மீளாய்வுக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

சிசு மரண வீதம் இலங்கை முழுவதிலும் சென்ற வருடம் 1·75 வீதமாகவே இருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

இதேவேளை —

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினரால் அயல் கிராமங்களான கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சிசு மரண வீதம் 4 என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலைமை யாழ். குடாநாட்டுப் பகுதியில் தொடர்வதற்கு கர்ப்பிணித் தாய்மார் போசாக்குக் குறைவே காரணமாக இருப்பதாக வைத்திய அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். (உ-168)

இன்று

வரணி குடமியன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பன்ன வேலை பயிற்சி வகுப்பு இன்று திங்கள் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்படும்

(த—117)

புலிகளின் ஆயுத பலம் மேலான நிலையில் உள்ளது

பிலிப்பீன்ஸ் அதிகாரி தெரிவிப்பு

இலங்கையில் உள்ள தமிழ்ப் போராளிகளின் ஆயுதபலம் மிக மேலான நிலையில் உள்ளது அப்படி இருக்க அவர்கள் ஏன் பிலிப்பீன்ஸ் வந்து ஆயுதங்கள் வாங்கவேண்டும் என்பது எமக்கு புரியவில்லை; குழப்பத்தையே தருகிறது.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியின் குற்றத்தடுப்பு ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் முன்கண்டவாறு தெரிவித்ததாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

அந்த அதிகாரி தன்னை அடையாளங்காட்டிக்கொள்ள விரும்பவில்லை என்று அந்தச் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்கள் வாங்குவதற்காக இலங்கைத் தமிழ்ப் போராளிகள் உல்லாசப்பயணிகளாக பிலிப்பீன்ஸுக்கு வந்திருப்பதாகவும்—

அவர்கள் நாட்டின் மத்திய விஸாயஸ் மற்றும் தெற்கு மின்டானோ பிராந்தியங்களுக்கு விஜயம்செய்துள்ளதாகவும் வெளியான புலனாய்வு அறிக்கைகள் குறித்து பிலிப்பீன்ஸின் குற்றத்தடுப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(த-எ)

அரசியல் கொலைகள் பற்றி விசாரணை நடத்த வேண்டும்

ஜனாதிபதிக்குக் கோரிக்கை

கொழும்பு, மே 2

நாட்டில் நடைபெறும் அரசியல் கொலைகள் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்

கண்டியில் அமைந்துள்ள உலக பௌத்த சகோதர அமைப்பு கடிதம் ஒன்றின் மூலம் ஜனாதிபதியிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டில் அரசியல் கொலைகள் அதிகரித்திருந்தன அவை அனைத்தும் ஜே வி பியினரின் அரசியல் கொலைகள் என அடையாளம் காணப்பட்டன. அரசியல்வாதிகள், தனிநபர்கள் தங்களுக்கு எதிரானவர்களை ஜே வி பியின் பெயரால் ஒழிக்கப்பட்டனர் எப்படியிருந்தும் ஜே வி பியினர் ஒழிக்கப்பட்ட பின் இவ்வாறான கொலைகள் குறைந்திருந்தன ஆனால் அண்மைக்காலத்தில் அவை மீண்டும் தலைதூக்கியுள்ளதைக் காணமுடிகிறது

மாத்தளை ஐ. தே. க. மாநகரசபை உறுப்பினர் ரகுமான் ஹூசைன் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக பலவாறான கதைகள் அடிபடுகின்றன.

தனக்குக் கொலை அச்சுறுத்தல் இருப்பதாக பாதுகாப்புக் கோரி சம்பந்தப்பட்டவர்களுக்கும், பொறுப்பு வாய்ந்தவர்களுக்கும் அவர் அறிவித்திருந்தபோதும் அவரைக் கொலை செய்வதற்குத் துணிந்தவர் யார்?

அப்படிப்பட்ட கட்டத்தில் அரசு செய்ய வேண்டியது என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாத வகையில் மாத்தளை மாநகரசபை உறுப்பினரின் படுகொலை குறித்து நீதியான, சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு; வெளியார் திணிக்கக்கூடாது!

ஜேர்மன் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு மே 2

இனப்பிரச்சினைக்கான தீர்வு இலங்கைக்குள்ளிருந்தே வரவேண்டும்; வெளியில் இருந்து திணிக்கப்படக் கூடாது ஜேர்மன் அரசின் நிலைப்பாடும் இதுவே.

ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு ராஜாங்க அமைச்சர் கை ஹூட் ஹாரிட் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''ஜனாதிபதியைச் சந்தித்தேன். அவருடன் இரு தரப்பு உறவுகள் பற்றியும் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு முடிவு காணும் தொடர்பான அரசின் முயற்சிகள் பற்றியும் பேசினேன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் ஊக்குவிப்பதாக உள்ளன. எனினும் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் பொருளாதார ரீதியில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக் கூடும்'' — என்று ஜேர்மன் அமைச்சர் கூறினார்

''ஜேர்மனியில் அறுபது லட்சம் வெளிநாட்டார் உள்ளனர் அவர்களில் சிலர் வேறு நாடுகள் ஊடாக வந்த அகதிகள் ஆவர். ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோருபவர்களில் 95 சதவீதமானோர் பொருளாதாரக் காரணங்களுக்காக வந்தவர்கள் ஆவர்.

தஞ்சம் கோரி விண்ணப்பிப்பவர்களில் உண்மையானோருக்கு உதவுவது குறித்து ஜேர்மன் பரிசீலனை செய்யும் – வேறு நாடுகளின் எல்லைகள் ஊடாக ஜேர்மனிக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டாரைக் கட்டுப்படுத்த தஞ்சம் கோரும் சட்டத்தைத் திருத்துவதற்கு ஜேர்மன் அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது'' — என்றும் ஜேர்மன் அமைச்சர் கூறினார்.

(த-எ)

மாத்தளை

மாநகரசபை உறுப்பினர் கொலை; அரசியல்வாதி மீதும் விசாரணை

கொழும்பு மே 2

மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ரஹ்மான் ஹூசைன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மிக செல்வாக்கு மிக்க அரசியல்வாதி ஒருவரை இரகசியப் பொலிஸார் அடுத்த சில தினங்களில் விசாரணை செய்யவுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இக்கொலை தொடர்பாக இதுவரை இரண்டு மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட 50 க்கு அதிகமானோரிடம் இரகசியப் பொலிஸார் விசாரணை செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் குரல் வானொலியில்

02 - 05 - 1994
திங்கள் இரவு
★ 8·01 — மேதின நாள் நிகழ்ச்சிகளின் தொகுப்பு
★ 8 30 — செய்திகள்
★ 8·40 — தரிசனம் — பட்டக்கணிப்பு, [illegible] அரசியல் [illegible]

03 - 05 - 1994
செவ்வாய் காலை
★ 7-02 — மலர் வணக்கம்
★ 7-15 — [illegible]
★ 7-[illegible] — [illegible]
★ 7·[illegible] — பத்திரிகைச் [illegible]
★ 7·40 — தாயகப் பாடல்கள்

சிங்கள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தம் நிலை உணரும் காலம் வரும். அது படிப்படியாக உங்கள் கண் முன்னே அரங்கேறும். அதற்கு கட்டியம் கூறுவது போலவே இன்று இங்கே இந்த மேதினம் கொண்டாடப்படுகிறது.

மிதவாதக் கட்சிகள்

நாமும் எமது முன்னைய மிதவாதக் கட்சிகளுடன் பேசியிருக்கிறோம்.

''நாம் போராடிக் களைத்து விட்டோம். எமது போராட்டத்தால் பலனில்லை. இனி மேல் மக்கள் ஆயுதம் தாங்கிய வன்முறைப் போராட்டத்தைத்தான் தமிழ் விடுதலையை முன்னெடுக்க வேண்டும்'' என்று மக்களிடம் சொல்லுங்கள் என எமது மிதவாத தலைவர்களிடம் நாம் முன்பு கேட்டோம்.

''நாம் சட்டரீதியாக செயற்படுபவர்கள். சட்டத்துக்கு புறம்பான வேலைகள் செய்ய மாட்டோம்'' என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

ஆனால் அது எந்த சட்டம், யாருடைய சட்டம் என்பதை அவர்கள் எமக்குச் சொல்ல மாட்டார்கள்.

பதவி ஆசை

அந்த கட்சியினர் - பதவி ஆசையா — எந்த ஆசையிலோ — கொழும்பில் வந்த அடுத்த பொதுத் தேர்தலில் பங்கு கொள்ள முடியுமா என இன்று பார்க்கிறார்கள். இதன் உட்பொருள் என்ன?

ஐந்து வருடத்துக்கு ஒரு முறை தேர்தல் வைப்பதற்கு காரணம் மக்களுக்கு மறதி அதிகம். அவர்கள் மறந்துவிடுவார்கள் என்பதாலே ஆகும் என தமிழ் நாட்டு அரசியல்வாதி ஒருவர் கூறினார்.

ஆனால் அந்த மாதிரி எம் மக்கள் இன்று மறதியுடன் இல்லை

சம்பிரதாய ஒடுக்கு முறைகளை -அடக்கு முறைகளை எதிர்த்துப் போராட நாம் தயாராக இருக்கிறோம். எமக்கு இருக்கிற வழியை நாம் தெளிவாகத் தேர்ந்து எடுத்திருக்கிறோம்.

மண்டேலா கூறியது

இன்றைய இந்த சமயத்தில் சுதந்திரம் பெற்ற மலரும் தென்னாபிரிக்காவின் தலைவர் நெல்சன் மண்டேலா கூறியது போல—

''எந்தக் கட்டத்திலும் நாம் விட்டுக் கொடுக்க முடியாது. நான் சுதந்திரமானவனாக இருந்துதான் பேச முடியும். அடிமையாக இருந்து பேச முடியாது'' — என்றார்;

எமது தலைவரையும், எமது இயக்கத்தையும், எமது மக்களையும் இரண்டாந்தரமாக மதித்து தமது காலின் கீழ் மிதித்து, பேச்சுக்கு அழைக்கும் அரசின் கூற்றை நெல்சன் மண்டேலாவின் கூற்றுடன் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

விடிவு வர

சிங்கள தொழிலாளர் வர்க்கம் விடிவு காண வேண்டுமானால் —

மலையக மக்கள் விடிவைக் காணவேண்டுமானால் —

சிங்கள வெறி அரக்கன் உடைக்கப்பட வேண்டுமானால் அது எங்கள் போராட்டத்தின் மூலம்தான் முடியும் என்பதை இந்த மேதினத்தின் மூலம் நாம் மனதில் நிறுத்திக் கொள்வோம் — என்றார்.

சக்கர வடிவில் அமைக்கப்பட்ட மேடை

மருத்துவ பீட மைதானத்தில் இரு சக்கர வடிவில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் இந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது

கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் சார்பில் திரு [illegible] அன்ரனி —

சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் சார்பில் திரு புவிநாயகம் —

நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. பரா —

கிராமிய உழைப்பாளர் சங்கங்களின் சார்பில் அதன் [illegible] ஊரெழு கிளையைச் சேர்ந்த திருமதி சந்திரராணி தவராஜா —

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் —

[illegible] கட்டடத் தொழிலாளர் சார்பில் சங்கத் தலைவர் கு. [illegible] —

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி —

கடற்றொழிலாளர் சங்கங்களின் சார்பில் திரு. த. சுந்தரலிங்கம் —

தெங்கு பனம் பொருள் உற்பத்தியாளர் சார்பில் திரு. சிவனேசன் —

கடற்புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த [illegible] —

பொதுப் பணியினர் சார்பில் அதிபர் திரு. இ. மகேந்திரன் ஆகியோர் மேதினக் கூட்டத்தில் உரையாற்றினர். (உ-5)

மலையக மக்கள் முன்னணி செயலாளர் விடுதலை

கொழும்பு, மே 2

மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பாவா அப்துல் காதர் கடந்த வெள்ளியன்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சி.வி. விக்னேஸ்வரனின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டார்.

இவருக்கு எதிராக அரச தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புத் தாக்குதலுக்குக் காரணமானவர் எனக் கருதப்படும் வரதனுக்கு 21-6-1991 இற்கும் 04-07-91 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தலவாக்கொல்லையில் புகலிடம் கொடுத்ததாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என்று தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்த நீதிபதி, அரச தரப்பின் ஆஜரான சாட்சி ஒருவர் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியமளித்ததால் சாட்சியை கடுமையாக எச்சரித்தார்.

''முழுவழக்கும் அரசியல் நோக்கத்துடனேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது பொலிஸார் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு மாறாக நடந்துள்ளனர். போதிய சாட்சியமின்றி தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் சந்தேகநபரை தடுத்து வைத்துள்ளனர்.

''இந்தக் கொடூரமான சட்டத்தின் கீழ் ஓர் அப்பாவிப் பிரஜைக்கு என்ன நடக்கும் என்பதற்கு இந்த வழக்கு ஓர் உதாரணம்'' — இப்படி நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

வலயம் - 2 பாடசாலைகளில் இன்று முதல் சுகாதார வாரம்

யாழ்ப்பாணம், மே 2

யாழ் வடக்கு வலய (வலயம் 2) பாடசாலைகளில் ஏப்ரல் 15ஆம் திகதி முதல் இடம்பெறவிருந்த சுகாதார வாரம் இன்று முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் என்று வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை —

இம்மாவட்டத்தில் 6 – 17 வயதுக்குட்பட்டவர்களில் — ஆயிரத்து 180 பேர் சொறியினாலும், ஆயிரத்து 646 பேர் நெருப்புக் காய்ச்சலினாலும், 21 ஆயிரத்து 470 பேர் மலேரியாவினாலும், 79 ஆயிரத்து 454 பேர் பற்சொத்தையினாலும், 5 ஆயிரத்து 310 பேர் இரத்தச்சோகையினாலும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் —

எனவே பாடசாலைகளில் சுகாதார வாரத்தை [illegible] முன்னதாக கொண்டாடும்படியும் அவர் கேட்டுள்ளார்.

(த-152)

தென்னாபிரிக்கத் தேர்தல்

வெற்றியை நோக்கி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

லண்டன், மே 2

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற - முதலாவது — இனப்பாகுபாடற்ற பொதுத் தேர்தலில் நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றியீட்டும் நிலையில் உள்ளது

அளிக்கப்பட்ட 2 கோடி 27 லட்சம் வாக்குகளில் நேற்று மாலை 20 லட்சம் வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் -

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 54. 6 வீதமும், ஆளும் தேசிய கட்சி 32. 6 வீதமும், சுதந்திர முன்னணி 3. 8 வீதமும், இன்காதா விடுதலைக்கட்சி 3 5 வீதமும், ஜனநாயக முன்னணி 2 5 வீதமும் வாக்குகள் பெற்றுள்ளன.

எண்ணப்பட்ட வாக்குகளில் 44 ஆயிரம் வாக்குகள் பழுதடைந்தவை என அறிவிக்கப்பட்டது

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் 7 மாகாணங்களில் முன்னணியில் உள்ளது ஜனாதிபதி டி கிளார்க்கின் தேசியக் கட்சியும், இன்காதா விடுதலைக் கட்சியும் தலா ஒரு மாகாணத்தில் முன்னணியில் இருக்கின்றன.

வாக்குகள் எண்ணப்படுவது இன்றிரவு பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3)

மரத்தில் பதுக்கி வைத்த 2 வெடிகுண்டுகள் மீட்பு

கொழும்பு, மே 2

மாத்தறை கொஸ்கொட பொலிஸ் பகுதியில் உள்ள பராமரிப்பற்ற காணியில் நின்ற மரமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் இருவெடி குண்டுகளை கொஸ்கொட பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட குண்டுகள் பின்னர் பூஸா முகாம் படையினரால் அழிக்கப்பட்டன.

காணிச் சொந்தக்காரர் பொலிஸாருக்கு தெரிவித்த தகவலையடுத்தே வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(உ-5)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் ஐங்கரன் விளையாட்டுக் கழகம், ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்தி வரும் குறுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

மென்பந்து கிரிக்கெட்

★ பிற்பகல் 3. 00 மணி:- [illegible] வி. க. 'பி' எதிர் ஐயனார் கோவிலடி வி க

கரப்பந்தாட்டம்
('செட் - அப்')

★ மாலை 4 - 00 மணி:- அரியாலை வி க. எதிர் [illegible] வி க

★ ★ ★

யாழ்ப்பாணம் [illegible] கழகம் ஒழுங்கு செய்து [illegible] அணி ஏழு இடையில் நடத்தும் வெற்றிக் கிண்ணப் போட்டி இன்று மாலை யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகின்றது. இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 00 மணி:- பல்கலைக் கழக நீல அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் 'பி' அணி.

★ 4.45 மணி:- பல்கலைக் கழக கோல்ட்ஸ் அணி எதிர் ஜெனின்ஸ் அணி

★ ★ ★

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள [illegible] மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3 00 மணி:- வளர்பிறை வி க. எதிர் [illegible] வி. க

★ 4 00 மணி: [illegible] ஐ. வி க எதிர் [illegible] ஏ.எஸ் வி க. [உ-23]

பிரேமா சிலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

[illegible].

நேற்றுக்காலை பிரேமதாஸாவின் சிலையை முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா திறந்து வைத்தார்.

வைபவத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எஸ். தொண்டமான், சிறிசேன கூரே உட்பட சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

[உ-ஏ -3-6-9]

வீட்டுத் தோட்டம் செய்திடு - உன் நோட்டுச் செலவைக் குறைத்திடு

வைத்திய கலாநிதி

அமரர் இரத்தினசபாபதி பாக்கியநாதன்

நினைவுப் பேருரை

இடம்:- யா/செங்குந்தா இந்துக் கல்லூரி
காலம்:- 02 – 05 – 1994 திங்கள் மாலை 4 மணி

நினைவுப் பேருரை:-
எஸ். சிவலிங்கராஜா எம். ஏ.
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

நினைவுரை:-
வைத்திய கலாநிதி திருமதி ஞா. பவானி
(சித்த மருத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிலையத்தினர்

வாலை அம்மன் சனசமூக நிலையம்,
திருநெல்வேலி கிழக்கு.

விளம்பர அன்பளிப்பு:

முருகன் மருந்துக் கடை
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.

தி. சண்முகநாதன் வாணிபம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
(30702)

மரண அறிவித்தல்கள்

திருமதி

இரத்தினசிங்கம் சிவக்கொழுந்து

திருமதி இரத்தினசிங்கம் சிவக்கொழுந்து 1-5-94 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை செல்லம்மாவின் மகளும், தம்பிராஜா, தங்கம்மா, ருக்குமணியின் சகோதரியும், தையல்நாயகியின் மைத்துனியும் அனுசயா, மோகனதாஸ் (Eng Facalty போராதனை), அஞ்சலா, சுரேக்கா, மோகனராஜன், பத்மினா ஆகியோரின் மாமியாரும், ஏனஸ்டி, விவியம், றெபேக்கா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02-05-94) 8 மணிக்கு தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. தம்பிராஜா

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு
யாழ்ப்பாணம்.
(30699)

செல்வி சர்மிகா குகன்

செல்வி சர்மிகா குகன் நேற்று (1-5-94) காலமானார்.

இவர் பருத்தித்துறை குகன் ஸ்ருடியோ உரிமையாளர் நாகரத்தினம் குகன் – பகீரதி ஆகியோரின் அன்பு மகளும் அரியகுட்டி நாகரத்தினம் (குகன் ஸ்ருடியோ உரிமையாளர்) திருமதி சின்னம்மா (இளைப்பாறிய ஆசிரியை) மற்றும் சிவப்பிரகாசம், திருமதி புனிதவதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குகதாசன் – திருமதி பவானி (கனடா). குகனேசன் – திருமதி உமாதேவி (லண்டன்) ஆகியோரின் பெறாமகளும், வனிதா-ஸ்ரீபவான் (கனடா), யசோதா - ஜெயக்குமார் (கனடா), சிவபாஸ்கரன் - செந்தி (சுவிஸ்), பாலபாஸ்கரன் - தியாகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகளும், கேணுகா, குகரேகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2-5-94) திங்கட்கிழமை பருத்தித்துறையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தகவல்:
நா குகன்
(தந்தை)

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.
(30700)

திருமதி நாகராசா இராசேஸ்வரி

(பப)

(புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம்)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நாகராசாவின் மனைவி இராசேஸ்வரி 1-5-94 இல் காலமானார்.

இவர் சுந்தரையா தம்பதிகளின் மகளும் செல்லப்பா தங்கமுத்து தம்பதிகளின் மருமகளும், ராசலிங்கத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சோமசுந்தரம், தருமலிங்கம், குணமாலை, காலஞ்சென்ற இராசலிங்கம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் கருணாநிதி, ஜெககொடி (வர்த்தகர் அரியாலை) வாசுகி, வைதேகி ஜெயக்குமார் (சுவிஸ்), சந்தி (கனடா), ஜெயபாலன் (கனடா), ஜெயராசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவாஜினி, மகேஸ்வரி, [illegible]கம் (வர்த்தகர் கோண்டாவில்), ஜெகதீஸ்வரன் (வர்த்தகர்), வளர்மதி (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), குமுதினி (கனடா), சித்திரா ஆகியோரின் மாமியாரும் சுகி, சுகந்தி, ராஜீவ் பார்த்தீபன், சுதாகரன், சரிதா, பாலசுரேஸ், சுதர்சினி, மேனகா, சந்திரிகா, விநோத், கீர்த்திகா, கலையரசி, றமேஸ், சதீஸ், துஷியா, கோபி ஷாலினி, சயந்து, சாளினியன், ஜனிந்ரன், சயந்தன், நிஷாந்தன், நிரோஷனா, றொசான் பிரகாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 11 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. கனகலிங்கம்
(மருமகன்)
வர்த்தகர் கோண்டாவில்

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
[30701]

எமது மண்ணில் நற்பெயர் பெற்றது

Royal
ROSE
Talcum Powder
Fine & Fragrant
ALL PURPOSE
TALCUM POWDER

றோயல் றோஸ்
ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ரால்கம்பவுடர்

NEW
DEEPA
ROSE
TALC
ROYAL

அழகிய கொள்கலன்களில் அற்புத
தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை

தென்னிந்திய திருச்சபை - யாழ். ஆதீனம்

சாவகச்சேரி தொழிற் பயிற்சி நிலையம்

மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி, தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய நெறிகளில் பயிற்சி பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பப் பத்திரங்களை காலை 9-00மணி முதல் மதியம் 12-மணிவரை பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

‘குரு இல்லம்’
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 05 - 1994

குறிப்பு:
கடைசியாக முடிவடைந்த பயிற்சி நெறியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெறாதவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் உங்களது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

செயற்திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை,
ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.
(சி/7941)

வண். கிழக்கு

கலட்டி அம்மன் தேவஸ்தானம்

மணவாளக் கோல விழா

அம்பிகை அடியார்களே!

நிகழும் பவ வருஷம் சித்திரை மாதம் 19 ஆம் நாள் இன்று (02 – 05 – 1994) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மணவாளக் கோலம் (சங்காபிஷேகம்) நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் வந்து சங்காபிஷேகக் கிரியைகளையும் சங்காபிஷேகச் சிறப்புகளையும் கண்டு தரிசித்து மாலை 5 30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையையும் அதனைத் தொடர்ந்து மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அன்னச் சேர்வையில் விநாயகர் அம்பிகை, சுப்பிரமணியர் திருவீதி வலம் வருதலும் நிகழும். திருவீதி உலா வரும் வேளையில்

தேவஸ்தான வித்துவான்
குகன் குழுவினர் மற்றும் க. சிவதாஸ் குழுவினர்,
கே. சிவகுமார்

ஆகியோரின் மங்கள இசையும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்பிகையின் இஷ்ட சித்திகளைப் பெற்று இனிது வாழ்வீர்களாக!

அனைவரும் வருக!
அன்னையின் அருள் பெறுக!!

கலட்டி அம்மன்-
இளைஞர் கழகம்.
[30698]

நில அளவைப் பயிற்சிக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்காணல்

நில அளவைப் பயிற்சிக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்காணல் எதிர்வரும் 11-05-94 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் - ஆரிய குளச் சந்திக்கு அண்மையில் இருக்கும் “புதிய உயர் கல்லூரி” என்ற கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்தோர் தேவைப்படும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதுவரை மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பிக்காதோர், இப் பயிற்சிக்குத் தோற்ற விரும்பின், 12-05-94 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு தமது விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடனும் சமுகமளிக்கவும்.

இயக்குனர்,
தமிழீழ நில அளவையாளர்
ஒருங்கிணைப்புக் கழகம்
(சி-7968)

மர்ம மரணம்

தந்திரிமலை இராணுவ முகாமைச் சேர்ந்த -- மதுகுமார என்ற சிப்பாய் -- கடந்த வியாழனன்று முகாமில் ஓர் அறையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

அவருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியும் அந்த அறையில் காணப்பட்டது. இம்மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

விடுதலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிப் புறப்பட்டனர்.

கோட்டங்கள், வட்டங்களில் இருந்துவந்த மக்களையும் உரும்பராய் சுன்னாகம், உடுவில் ஆகிய இடங்களில் திரட்டி, சிராம் நிரைப்படுத்தி மருதனார்மடத்துக்கு பேரணி அமைப்பாளர்கள் அனுப்பி வைத்தனர்.

மருதனார்மடம் சந்தியில் பி.ப. 1.30 மணியில் இருந்தே மக்கள் கடல் அலை எனத் திரண்டனர். பேரணி அங்கிருந்து 2. 25 மணிக்கு ஆரம்பமானது.

தலைவரின் படம்

தமிழீழத் தேசியக் கொடி முன்னே ஏந்திச் செல்லப்பட்டது. அணிவகுப்பு வரிசைகளின் பின்னால் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் மிகப் பெரிய அளவிலான படம் ஏந்திச் செல்லப்பட்டது.

விடுதலைப் புலிகளின் ஆண்கள் தரைப்படைப் பிரிவினர், விடுதலைப் புலிகள் மகளிர் தரைப்படைப் பிரிவினர், கடற்புலிகள் (ஆண்கள் பெண்கள்) பிரிவினர், தமிழீழ காவல்துறையினர், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் ஆகியோர் பேரணியில் அணிவகுப்புகளை கண்ணைக் கவரும் விதத்தில் நடத்தி வந்தனர்.

அணிவகுப்பு வரிசைகளைத் தொடர்ந்து—

இந்து, கிறிஸ்தவ மத குருமார்கள், கடற்புலிகள், கூட்டுறவுத் துறையினர், கிராம உழைப்பாளர்கள், கல்விசார் ஊழியர்கள், மாணவர்கள், உள்ளூராட்சி ஊழியர்கள், சுகாதார ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், பொறியியல் ஊழியர்கள் என்ற வரிசையில்—

வடமராட்சி, தென்மராட்சி, வலி வடக்கு, வலி. மேற்கு, வலி. கிழக்கு, யாழ். பகுதி, தீவகம் என்ற வகையில் மக்கள் பேரணியில் மாறி மாறி அலை அலையாகக் கலந்து கொண்டனர்.

பேரணியில் பங்கு பற்றிய மக்கள் கோஷங்களை எழுப்பியதோடு சுலோக அட்டைகளையும், பதாகைகளையும், தலைவர் பிரபாகரனின் படங்களையும் ஏந்திய வண்ணம் கவிதை பாடியும் கீதமிசைத்தும் சென்றனர்.

பேரணியில் 200 க்கும் மேற்பட்ட ஊர்திகள் கலந்து கொண்டன.

வன்னியின் வளத்தைக் காட்டி அங்கு வருமாறு அழைக்கும் ஊர்தியும், தென். தமிழீழ மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஊர்தியும், பூநகரித் தாக்குதலைக் காட்டும் ஊர்தியும் குறிப்பிட்டுக் கூறக் கூடியவை.

பேரணியில் புரவி நடனம், கரகாட்டம், சிந்து நடைக் கூத்து ஆகியன உட்பட பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மிகப் பெரியதும், உயர்ந்ததுமான இரு பெண் பொம்மைகளின் சிந்து நடைக் கூத்து மக்களைக் கவர்ந்தது.

பேரணி மருதனார்மடத்திலிருந்து இணுவில், தாவடி, கொக்குவில் வழியாக நாச்சிமார் கோவிலடியை அடைந்து—

அங்கிருந்து சேர். பொன் இராமநாதன் வீதி வழியாக, பிறவுண் வீதியூடாக பொதுக் கூட்ட (மருத்துவபீட) மைதானத்தை பி. ப. 4 மணிக்கு அடைந்தது.

பேரணியைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் நின்று பார்த்தனர்.

பொதுக் கூட்ட மேடை தொழிலாளர்களின் தொழிற் கருவிகளை எடுத்துக் காட்டும் விதத்தில் விசேடமாக சுமார் 10 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

பேரணி மைதானத்தை அடைந்ததும் அங்கு அணிவகுப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது.

பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் முடிந்ததும் உதைபந்து எழுச்சி வாரப் போட்டி, வதிவிட வேலைகளைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கப்பட்டது. (அ-5-
162-15-152-111-85)

வெலிக்கடை படுகொலைகள்:

குட்டிமணிக்காக நஷ்டஈடு எவரும் கோரவில்லை

கொழும்பு, மே 2

வெலிக்கடை படுகொலைகளின் போது உயிரிழந்த குட்டிமணிக்காக எவரும் நீதிமன்றில் நஷ்டஈடு கோரவில்லை.

வெலிக்கடை படுகொலையின் போது உயிரிழந்த 30 பேர் சார்பிலேயே நஷ்டஈடு கோரி நீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டது என்றும்—

அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க அரச தரப்பு நீதிமன்றத்தில் இணங்கியது என்றும் தெரியவருகிறது.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி எம். டி. ஜே. டி. எஸ். பாலபெத்தபெண்டி முன்னிலையில் இந்த இணக்கம் காணப்பட்டது.

இதன்படி—

டாக்டர் ராஜசுந்தரம் கொல்லப்பட்டதற்கு நஷ்டஈடாக அவரது மனைவிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம்ரூபா வழங்கப்படும்.

ஆறு பேருக்கு 75 ஆயிரம் ரூபா வீதமும்—

8 பேருக்கு 55 ஆயிரம் ரூபா வீதமும்—

வேறு இருபது பேருக்கு 50 ஆயிரம் ரூபா வீதமும் நஷ்டஈடு வழங்கப்படும். (உ-9)

அட்டைசக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவித அரசியலிலும் ஈடுபட விருப்பமில்லை.” — இப்படி மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ அல்ல ... தெரிவித்தார்.

“கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்தித் தருமாறு அரசு எனக்கு உத்தரவிட்டபோது அக்கடமையை நான் செவ்வனே செய்தேன் இதை சகலரும் அறிவர். எனது தொழில் திறமையில் அரசு பூரண நம்பிக்கை வைத்திருக்கிறது.” — இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-9)

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி

விநாயகர் ஆலய

லக்ஷார்ச்சனை பூர்த்தி விழா

02 – 05 – 1994

★ காலை 7-30 மணி
1008 சங்காபிஷேகம்
★ மாலை 3-00 மணி
லக்ஷார்ச்சனை பூர்த்தி
★ மாலை 7-00 மணி
பாராட்டு விழா

தொடர்ந்து
மகாபாரத சொற்பொழிவாற்றிய
திருமிகு செ, சத்தியமூர்த்தி M. A.
அவர்களுக்கு
பாராட்டும் பட்டமளிப்பும்
வழங்கப்படும் பட்டம்:
“அருள் நெறிக் கொண்டல்”

வழங்குபவர்: இ. ஜெயராஜ்
(கம்பன் கழகம்)

ஆசியுரை: நல்லை ஆதீன முதல்வர்
சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

வாழ்த்துவோர்:
கலாநிதி பா. கோபால கிருஷ்ணன்
(தலைவர், இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
தமிழருவி த. சிவகுமாரன்
அருள்நெறிச் செல்வர் ஆர. திருமுருகன்

- ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

விளம்பர அன்பளிப்பு:
HARY'S INSTITUTE,
KONDAVIL EAST, KONDAVIL.
[30664]

மரண அறிவித்தல்கள்

அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை

அ. சூசைப்பிள்ளை அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் யூப்பிறேசியாவின் அன்புக் கணவரும், அருமைத்துரை, பற்றீசியா, எலிசபெட் (சுவிஸ்), சந்திரன் (வட கிழக்கு மாகாண சபை, செயலாளர் பணிமனை, திருகோணமலை): றஞ்சினி, விஜி, லெற்றீசியா (சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனை, யாழ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர், சவுந்தரநாயகம், புனிதா, றஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், மேவின், நரேஷ், நிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை [03-05-94] காலை 8-30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்
சூ யூப்பிறேசியா
[மனைவி]

51/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
[30703]

திருமதி மனோன்மணி சண்முகம்

அத்தியடியை பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சண்முகம் நேற்று [01-05-94] காலமாகிவிட்டார்.

அவருடைய சமக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
சண்முகம் சற்குருநாதன்
[மகன்]

02, திருவள்ளுவர் ஒழுங்கை,
அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[30704]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் [illegible] 398/5 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 - 05 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.